


▶ சங்கரா பல்கலைக் கழகம் கல்வியில் துறை சார்பில் நடந்த ஆசிரியர் தினவிழாவில் 16 பேராசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருதை பல்கலை. வேந்தர் ஜெயராம் ரெட்டி வழங்கினார். அருகில் துணைவேந்தர் விஷ்ணுபோத்தி, பதிவாளர் சீனிவாசு ஆகியோர் உள்ளனர்.

## காஞ்சிபுரத்தில் ஆசிரியர் தினவிழா

# 16 பேராசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருது

**காஞ்சிபுரம், செப். 6:** காஞ்சிபுரம் சங்கரா பல்கலைகழகம் கல்வியல் துறை சார்பில் ஆசிரியர் தினவிழா நடைபெற்றது. இதில் 16 பேராசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருது வழங்கப்பட்டது.

பல்கலைக்கழக வேந்தர் டாக்டர் ஜெயராம் ரெட்டி தலைமை தாங்கி டாக்டர் ராதாகிருஷ்ணன் படத்திற்கு மாலை அணிவித்து குத்துவிளக்கேற்றி விழாவை தொடங்கி வைத்தார்.

துணை வேந்தர் டாக்டர் விஷ்ணு போத்தி, பதிவாளர் சீனிவாசு ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்வியல் துறை டீன் மூர்த்தி வரவேற்று பேசினார். சமுதாயத்தில் ஆசிரியர்கள் பங்கு, டாக்டர் ராதா கிருஷ்ணன் எப்படி கீழ் நிலையில் இருந்து குடியரசு தலைவராக உயர்ந்தார்? என்பதை நினைவு கூர்ந்து அனைவரும் பேசினர். பின்னர் ஆசிரியர் தின விழா உறுதி மொழி எடுத்துக்கொண்டனர்.

இயற்பியல் துறைதுறை தலைவர் வெங்கட்ரமணன், உடல் கல்வி இயக்குநர் குணாளன், உள்ளிட்ட 16 பேராசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருது வழங்கப்பட்டது. இதில் ஏராளமான ஆசிரியர் பெருமக்கள் கலந்து கொண்டனர். மேலாண்மை துறை டீன் டாக்டர் ரமணகுமார் நன்றி கூறினார்.